# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 268/மா/2023**

**நாள்: 20.11.2023**

திரு. B. திருமூர்த்தி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம்–5,
மதுரை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், TVS நகர், சத்தியசாயி நகர், சீனிவாசா ரோடு விரிவாக்கம், கதவு எண்.127ல் வசிக்கும் திரு. பா. திருமூர்த்தி என்பவரின் 10.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2023–ல் பெறப்பட்டு 268/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை மாவட்டம், TVS நகர், சத்தியசாயி நகர், சீனிவாசா ரோடு விரிவாக்கம், கதவு எண்.127ல் வசிக்கும் திரு. பா. திருமூர்த்தி என்பவரின் 10.08.2023 நாளிட்ட மனுவில்,

மதுரை, சத்தியசாயி நகர், TVS நகரை சேர்ந்த திரு. பா. திருமூர்த்தி தான் குடியிருந்து வரும் வீட்டின் பகுதியானது முறையே சீனிவாசா ரோடு விரிவாக்கம் (சத்தியசாயி நகர்) சர்வே எண்.104/1 மதுரை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடமாகும் என்றும், தனது வீடு தன்னுடைய மனைவி திருமதி கலையரசி பெயரில் 15.12.1986ஆம் ஆண்டு வாங்கப்பட்டு, வீட்டு கதவு எண்.127 மாநகராட்சியால் அளிக்கப்பட்டது எனவும், எனது வீட்டிற்கு முன்புறம் 14 அடி பொதுப்பாதை ஆகும் என்றும், மேலும் என்னுடன் சேர்ந்து மற்ற குடியிருப்புதாரர்களால் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் வாயிலாக பொது நடைபாதைக்கு இடம் மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்டது எனவும், தனது வீட்டிற்கு எதிரே கதவு எண்.137ல் திருமதி கிரிஜா என்பவர் தனது பழைய வீட்டினை இடித்து, மாநகராட்சியின் அனுமதி பெறாமல் மேற்படி 14 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டிதை மாநகராட்சி மற்றும் இதர அதிகாரிகளுக்கு 27.11.2022ம் தேதியன்று மனு செய்ததாகவும், இது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P(MD) No.27315 of 2022 வழக்கு தாக்கல் செய்ததாகவும், அவ்வழக்கில் " If there is any encroachment in the place in question, the same would be removed by the authorities concerned, after affording sufficient opportunity to all the parties concerned and by following due process of law, within a period of eight weeks

from the date of receipt of a copy of this order" என்று தீர்ப்பு அளிக்கப்பட்டதாகவும், தனக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திருமதி கிரிஜா என்பவர் கட்டும் வீட்டிற்கு மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்றும், ஆனால் எனது மனைவி ஆக்கிரமிப்பு செய்ததாக கூறி 17.02.2022 அன்று கடிதம் அனுப்பியதாகவும், அதேபோல் தனது பக்கத்து வீட்டுகாரர் திரு. அய்யாவு அவர்களுக்கும் கடிதம் அனுப்பியதாகவும், திரு.அய்யாவு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P(MD) No.3611 of 2023 வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கில் "if there is any encroachment in the land in question, the respondents Corporation is directed to take necessary action for removal of encroachment, after providing opportunity to all the parties concerned and by following due process of law, within a period twelve weeks from the date of receipt of a copy of this order" என்று தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும், ஆனால் மதுரை மாநகராட்சி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும், திருமதி கிரிஜா என்பவர் கட்டிட வரைபட அனுமதி இல்லாமல் 14 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமித்த செயல், மதுரை மாநகராட்சி சட்ட விதிகள் மற்றும் தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் நகர் வளர்ச்சி சட்ட விதிகளுக்கு முரணான செயல் ஆகும் என்றும், அதனை தடுக்க மதுரை மாநகராட்சி அலுவலர்கள் தவறிவிட்டனர் என்றும், உயர்நீதிமன்ற உத்திரவினையும் மதிக்கவில்லை எனவும் தெரிவித்து மேற்படி சட்ட விரோதமான செயலுக்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 19.9.2023 நாளிட்ட கடிதத்தில் மதுரை மாநகராட்சியின் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது அவர் தனது 09.10.2023 மற்றும் 8.11.2023 நாளிட்ட அறிக்கையில்:**

மதுரை மாநகராட்சி மண்டலம்–5 மதுரை சத்திய சாய் நகர், சீனிவாசா ரோடு விரிவாக்கம் பொதுப்பாதையில் மனுதாரரின் எதிர் வீடான கதவு எண்.137இல் வசிக்கும் திருமதி கிரிஜா என்பவர் தனது பழைய வீட்டினை மதுரை மாநகராட்சி அனுமதியின்றி இடித்துவிட்டு மேற்படி பொதுப்பாதையில் 14 அடி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டுவது குறித்த 27.11.2022 புகார் மனு தொடர்பாக, திருமதி கிரிஜா என்பவருக்கு மதுரை மாநகராட்சி 1971 சட்டம் 296 (1) மற்றும் (2)ன்படி நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டது எனவும், மனுதாரர் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பின்படி ஆக்கிரமிப்பில் தொடர்புடைய அனைவருக்கும் மாநகராட்சியால் நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டது எனவும், இதில் மனுதாரரும் ஒரு ஆக்கிரமிப்புதாரர் ஆவார் எனவும், திருமதி கிரிஜா என்பவர் பொதுப்பாதையில் ஆக்கிரமிப்பு செய்த 14 அடி வரையிலான பொதுப்பாதையில் இருந்த பில்லர் உள்ளிட்டவைகள் 21.2.2023ல் முற்றிலும் காவல் துறையின் ஒத்துழைப்புடன் அகற்றப்பட்டது எனவும், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதின் மூலம் நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டது என்றும், திருமதி கிரிஜா என்பவரது 14அடி பொதுப்பாதை ஆக்கிரமிப்புகள் அனைவரது முன்னிலையில் அகற்றப்பட்ட பின்பும் மனுதாரர் எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்து இருப்பது இயற்கை நீதி கோட்பாட்டிற்கு எதிரானது என்றும், மேலும் மனுதாரர் மேற்படி பொதுப்பாதையில் தற்போது 1.22 சதுர மீட்டர் பரப்பளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதற்கு மாநகராட்சியிலிருந்து ஆக்கிரமிப்பு அகற்றக் கோரும் அறிவிப்பு சார்பு செய்து வரப்பெற்ற விளக்கத்தில் வருவாய்த்துறை ஆவணங்களுக்கும் சர்வே (நில அளவைத்துறை) ஆவணத்திற்கும் வேறுபாடு உள்ளது என கூறி ஆக்கிரமிப்பு அகற்றாமல் உள்ளார் எனவும், இருப்பினும், மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்ட 14அடி பொதுப்பாதை ஆக்கிரமிப்பு தற்போதைய நிலையில் முற்றிலும் அகற்றப்பட்டுள்ளது எனவும், மேலும், பொதுப்பாதை ஆக்கிரமிப்பு அகற்றியது தவிர திருமதி கிரிஜா என்பவரது அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு தடை விதித்து நோட்டீஸ் சார்பு செய்து உள்ளது என்று தெரிவித்துள்ளார்."

முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 09.11.2023 அன்று நாகர்கோவில் சர்க்யூட் ஹவுஸில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

மனுதாரர் 9.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"எனது வீட்டிற்கு முன்புறம் 14 அடி பொதுப்பாதை உள்ளது. என்னுடன் சேர்ந்து மற்ற குடியிருப்புதாரர்களால் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் வாயிலாக மாநகராட்சிக்கு பொது நடைபாதைக்கு இடம் கொடுக்கப்பட்டது. எனது வீட்டிற்கு எதிரே கதவு எண்.137ல் திருமதி கிரிஜா என்பவர் தனது பழைய வீட்டினை இடித்து, மாநகராட்சியின் அனுமதி பெறாமல் மேற்படி 14 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளனர். மேலும் அவர் மேற்கொள்ளும் கட்டடப் பணிகளின்போது கட்டடக் கழிவுகள் எனது வீட்டிலும் பாதையிலும் விழுகின்றன. இது குறித்து மாநகராட்சி அலுவலர்களுக்கு மனு அளித்தும், எனது மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பு மாநகராட்சியால் நீக்கிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு, இது தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 10.08.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி மண்டலம் – 5ன் உதவி ஆணையர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 09.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"மதுரை மாநகராட்சி மண்டலம்–5, மதுரை சத்திய சாய் நகர் சீனிவாசா ரோடு விரிவாக்கம் பொதுப்பாதையில் மனுதாரர் வீட்டின் எதிரில் கதவு எண் 137இல் வசிக்கும் திருமதி கிரிஜா என்பவர் தனது பழைய வீட்டினை மதுரை மாநகராட்சி அனுமதியின்றி இடித்து மேற்படி பொதுப்பாதையில் 14 அடி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டுவது குறித்த புகாரையொட்டி மேற்கண்ட இடம் ஆய்வு மற்றும் அளவீடு செய்யப்பட்டது. அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் மேற்கண்ட கட்டடம் கட்டுப்படுவதைத் தொடர்ந்து கட்டுமானப் பணிகளை நிறுத்திடவும், கட்டப்பட்ட அக்கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்துவும், 1.12.2022 அன்று திருமதி கிரிஜா என்பவருக்கு மதுரை மாநகராட்சி 1971 சட்டம் 296 (1) மற்றும் (2)ன்படி நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட கட்டடத்திற்கான Lock and Seal Notice மற்றும் இதர தாக்கீதுகள் வழங்கப்படும் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ள மேற்கண்ட திருமதி கிரிஜா என்பவர் பொதுப்பாதையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 14 அடி வரையிலான பொதுப்பாதையில் இருந்து ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது. எனினும் மேலும் ஏதேனும் ஆக்கிரமிப்புகள் இருந்தால், அங்கு நேரடியாக சென்று அளவீடு செய்து, அங்குள்ள ஆக்கிரமிப்புகளை 20 நாட்களில் அகற்றப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்படும் எனது 8.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் தான் வசிக்கும் சத்தியசாயி நகர் சீனிவாசா ரோடு விரிவாக்கம் கதவு எண்.127 வீட்டின் முன்புறம் 14 அடி பொதுப்பாதை உள்ளது என்றும், தன்னுடன் சேர்ந்து மற்ற குடியிருப்புதாரர்களும் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் வாயிலாக மதுரை மாநகராட்சிக்கு பொது நடைபாதைக்கு இடம் அளிக்கப்பட்டது என்றும், ஆனால் தங்கள் வீட்டிற்கு எதிரே கதவு எண்.137ல் திருமதி. கிரிஜா என்பவர் தனது பழைய வீட்டினை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் இடித்து விட்டு, மேற்படி 14 அடி பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளார் என்றும், இது குறித்து மதுரை மாநகராட்சிக்கு புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவித்து மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றவும், மாநகராட்சியின் அனுமதியில்லாமல் திருமதி. கிரிஜா என்பவரால் கட்டப்பட்ட கட்டடத்தின் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும், தன் மனு மீது நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட கதவு எண்.137ல் வசிக்கும் திருமதி கிரிஜா என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டடம் உள்ள இடம் ஆய்வு மற்றும் அளவீடு செய்யப்பட்டது என்றும் அக்கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை நிறுத்திடவும், கட்டப்பட்ட அக்கட்டத்தை இடித்து அப்புறப்படுத்தவும் 1.12.2022 அன்று திருமதி கிரிஜா என்பவருக்கு மதுரை மாநகராட்சி 1971 சட்டம் 296(1) மற்றும் (2)ன்படி நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டது என்றும் இதனைத் தொடர்ந்து மேற்கண்ட கட்டடத்திற்கான Lock and Seal Notice தாக்கீதுகள் வழங்கப்படும் என்றும், திருமதி கிரிஜா என்பவர் பொதுப்பாதையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 14அடி வரையிலான பொதுப்பாதையில் இருந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு விட்டது என்றும், மேலும் ஏதேனும் ஆக்கிரமிப்புகள் இருந்தால் அதனை நேரடியாக சென்று அளவீடு செய்து அங்குள்ள ஆக்கிரமிப்புகளை 20 நாட்களில் அகற்றப்படும் என்றும் மேலும் மனுதாரர் தற்பொழுது 1.22 சதுர மீட்டர் பரப்பளவில் ஆக்கிரமிப்பு செய்து அதனை அகற்றாமல் இருப்பதால், மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்றும், மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும் மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் குறிப்பிட்ட விதிமீறல் கட்டடத்தின் உரிமையாளருக்கு 1.12.2022 அன்று மதுரை மாநகராட்சி 1971 சட்டம் 296(1) மற்றும் (2)ன்படி நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டு, விசாரணை நாள் வரை எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து, விசாரணையின் வாக்குமூலத்தில் Lock and Seal Notice மற்றும் இதர தாக்கீதுகள் வழங்கப்படும் என்று தெரிவித்து இருப்பது, மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் மண்டல அலுவலர்கள் தங்களுடைய பணியில் எவ்வளவு மெத்தனமாக உள்ளார்கள் என்பது தெரியவருகிறது. இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் மனுதாரரும் ஒரு ஆக்கிரமிப்பாளர் என்று தெரிவித்து இருப்பது மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலர்கள் தங்களின் கடமை தவறிய செயலை திசைதிருப்பும் விதமாக உள்ளதாகவே இம்முறைமன்றம் கருதுகிறது. மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எவ்விதமான ஆக்கிரமிப்பு செய்து இருந்தாலும், அதனை அகற்ற பாரபட்சமின்றி சட்டபூர்வ நடவடிக்கை

எடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பு மதுரை மாநகராட்சியின் அலுவலர்களுக்கு உண்டு என்பதை இம்முறைமன்றம் நினைவூட்ட விழைகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையர் மற்றும் இளநிலைப்பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில், மேற்குறிப்பிட்ட மாநகராட்சிக்கு சொந்தமான பொதுப்பாதையில் ஏதேனும் ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை 20 நாட்களுக்குள் அகற்றப்படும் என தெரிவித்தவாறு நடவடிக்கை எடுக்குமாறும், திருமதி கிரிஜா என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு Lock and Seal Notice மற்றும் இதர தாக்கீதுகள் வழங்கப்படும் என்று தெரிவித்தவாறு நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு எடுக்கப்பட்ட அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் மதுரை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் ஆக்கிரமிப்பு குறித்து புகார்கள் இருப்பின் அதன் மீது தனிக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உதவி ஆணையர்களுக்கு உத்திரவிடவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. பா. திருமூர்த்தி,
   த/பெ. K. பாலுச்சாமி,
   கதவு எண்.127, சீனிவாசா ரோடு விரிவாக்கம்,
   சத்தியசாயி நகர், TVS நகர்,
   மதுரை – 625 023.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   தல்லாகுளம், மதுரை – 625 002.
3. உதவி ஆணையாளர், (ஆணையர் வழியாக)
   மதுரை மாநகராட்சி,
   மதுரை – 625 002.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

பதிவாளர்